# பத்திரிக்கைச் செய்தி

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருவள்ளூர் பிரிவு அலுவலகத்தை அணுகி தான் ஒரு கட்டிட மேஸ்திரி எனவும் தான் புதிதாக வீடு கட்டிக்கொடுத்ததில் வீட்டின் சொந்தக்காரருக்கும் தனக்கும் பணப் பிரச்சினை ஏற்பட்டதாகவும், வீட்டின் சொந்தக்காரர் கொடுத்த புகாரின் மீது எவ்வித வழக்கும் பதிவு செய்யாமல் இருக்க திரு.சிவராஜ், காவல் உதவி ஆய்வாளர், கவரப்பேட்டை காவல் நிலையம், திருவள்ளூர் மாவட்டம் தனக்கு ரூ.20,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாக புகார் மனு அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 25.03.2021 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு. சிவராஜ், காவல் உதவி ஆய்வாளர், புகார்தாரரை லஞ்ச பணத்தை ஆரணி பஜாரில் வந்து கொடுக்கும்படி கூறியதின்பேரில், லஞ்சபணமான ரூ.20,000/-த்தை புகார்தாரரிடமிருந்து ஆரணி பஜாரில் தன்னுடைய காரில் வைத்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

**PRESS NOTE**

The complainant approached the Vigilance & Anti – Corruption, Thiruvallur Detachment and gave complaint that he is a mason and the house owner for whom he is constructing house gave a complaint against him at Kavarapettai P.S., Thiruvallur District. Tr.Sivaraj, Sub Inspector of Police, Kavarapettai P.S., Thiruvallur District demanded bribe amount of Rs.20,000/- from the complainant for not registering any case against him. In this connection a case was registered and a trap was organized today 25.03.2021.

During the course of trap proceedings, Tr.Sivaraj, Sub Inspector of Police, instructed the complainant to come to Arani Bazaar and reiterated the earlier demand and received the bribe amount of Rs.20,000/- in his car from the complainant . The accused was arrested.